# ஜனாதிபதி தேர்தல் 1994-லேயே நடைபெறும்

## – பிரேமதாஸா அறிவிப்பு

பருவவெளியீட்டு[illegible]
யாழ்ப்பாண[illegible]

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 15 இதழ் 323
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30 — 12 — 1992

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் முன்னர் அறிவித்தபடி 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதமே நடைபெறும் அதற்கு முன்னர் எக்காரணம் கொண்டும் இத்தேர்தல் நடைபெறமாட்டாது இவ்வாறு ஜனாதிபதி. ஆர். பிரேமதாஸா நேற்று நம்புக்கணையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

தேர்தல் நடைபெற்றால் நான் வெற்றி பெறுவேன் என்று வெளிநாட்டு அரசியல்

(4-ம் பக்கம் பார்க்க)

## படைகளுக்கு ஆட்சேர்க்க அரசு தீவிரபிரசாரம்

(கொழும்பு)

படைகளில் சிங்கள இளைஞர்களைச் சேர்ப்பதற்கு அரசு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படைகளில் சேர்வோரின் குடும்பங்களுக்கு விசேட சலுகைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும் என்று சிங்கள கிராமங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# ராணுவரோந்து அணிசிதறடிப்பு

# ஐந்து படையினர் உயிரிழப்பு

## மட்டு. புனானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**மட்டக்களப்பு புனானைப் பகுதியில் இராணுவ ரோந்து அணி மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. படையினர் பலர் முகாம்களுக்குள் தப்பியோடினர்.**

புனானை இராணுவ முகாமிலிருந்துநேற்றுக்காலை 10 மணியளவில் வாகனேரி இராணுவ முகாமிற்கு 15ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இராணுவ ரோந்து சென்று கொண்டிருந்தபோது புனானை ராணுவ முகாமிற்கு அருகில் 150 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினார்கள்.

இத்திடீர் தாக்குதலில் ரோந்து அணி சிதறடிக்கப் பட்டதுடன் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும் கைவிட்டு ஏனைய படையினர் அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு தப்பியோடினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

மட்டு. புனானையில் நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்:

★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கி -1
★ அதற்குரிய ரவைக் கூடுகள் -5
★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கிக்குரிய இணைப்புகள் -48
★ ரி 56 ரக துப்பாக்கிகள் -2

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வருவோரை பதியுமாறு வலியுறுத்து

(கொழும்பு)

வெளியிடங்களில் இருந்து கொழும்புக்கு வருபவர்களின் விபரங்களைப் பொலிஸாருக்குத் தெரிவிக்காமல் தமது வீடுகளில் அவர்களைத் தங்க வைப்பவர்கள், அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று மீண்டும் அறிவித்தது.

வெளியிடங்களில் இருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா செட்டிகுளத்தில் தொடர்ந்து மோதல்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் 'ஒபரேஷன் தங்கச் சுரங்கம்' என்னும் பெயரிலான இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பகுதியில் இந்த இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது

இந்த நடவடிக்கையின் போது புலிகளுடன் கடும் சமர் புரிய வேண்டியுள்ளதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## குமணவில் தபால்களை அனுப்ப நடவடிக்கை

(நல்லூர்)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் குமண கப்பல் அடுத்த வாரம் முற்பகுதியில் கொழும்புநோக்கி புறப்படவிருக்கின்றது. தொடர்ந்து சீரான காலநிலை காணப்படுமாயின் இக்கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணி 4-ம் திகதியுடன் முடிவடையுமெனவும் 5 ம், 6-ம் திகதிகளில் பருத்தித்துறையிலிருந்து குமண புறப்படும் எனவும் தெரிய வருகின்றது.

குமணவில் தபால் பொதிகளை அனுப்புவதற்காக

(4-ம் பக்கம் பார்க்க)

## வெளிவாரிப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை முடிவுகள் பொங்கல் தினத்திற்கு முன்னர் வெளியாகுமென யாழ்பல்கலைக்கழக கலைத் துறைப் பீடாதிபதியும் வெளிவாரிப் பீடாதிபதியுமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டம்பர் ஒக்டோபர் மாதங்களில் யாழ்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டுக்கு புதிய பாடத் திட்டம்

(கொழும்பு)

1993-ம் ஆண்டு முதல் முதலாம் ஆண்டுக்குப் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது

இதுவரை நாடு பூராவிலும் அமுல்படுத்தப்பட்டுவந்த முதலாம் ஆண்டுப் பாடத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டு, புதிய பாடத் திட்டம் அமுல்படுத்தப் படுமென்றும், இப்புதிய பாடத் திட்டம் பற்றிக் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்குத் தற்போது பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது எனவும் இவர்கள் தத்தமது மாவட்டங்களுக்குச் சென்று இப்புதிய பாடத்திட்டம் பற்றி விளக்கமளிப்பார்கள் என்றும் ஆரம்ப கல்வித் துறை தேசிய நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வி)

## பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால் 27 ஆயிரம் மாணவரின் உயர்கல்வி பாதிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக ஊழியர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் கடந்த காலங்களில் நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்தன.

இதனால் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்ற 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்னும் பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடி

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கை திரும்பியுள்ள அகதிகள் சிறைக்கைதிகளாக முகாம்களில் நடத்தப்படுகின்றனர்!

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ள ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் திருமலையில் அகதி முகாம்களில் 'சிறைக் கைதிகள் போல் வைக்கப்பட்டிருப்பதாக ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் யுத்தச் சூழ்நிலை நிலவுவதால் இந்த அகதிகளை அவர்களது சொந்த இடங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஊழியர்க்கும் 30 வீத சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 30 வீதச் சம்பள அதிகரிப்பு 1993 ம் ஆண்டு ஜனவரி முதல் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

இந்த அறிவிப்பு 1992-ம் ஆண்டுக் கொடுப்பனவுகளுடன் சேர்த்து வழங்கப்படுமென்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்கண அலு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கீரை விதை

கீரைவிதை பெற்றுக் கொள்ள ரூபா 2/-க்கான அஞ்சல் முத்திரை அனுப்பி வைக்கவும். மிக்கவைத் [எ-2730]

### கலர் பிலிம் பிறின்ரிங்

துரித கதியிலும், குறைந்த செலவிலும் கலர் பிலிம் சுருள்கள் பிறின்ரிங் செய்யலாம். Quick Photo மணிக்கூட்டு வீதி, எழிலகத்துக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (சி-7098)

### தவறிவிட்டது

ஜினதாசா — ஜெயமணி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 446773011V தவறிவிட்டது எடுத்தவர்கள் இல. 24/3, மத்திய கிழக்கு வீதி, நெக்கிளமேசன் குருநகர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி-7100)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7035)


## உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் புனித தோமையப்பர் ஆலய உற்சவம் கடந்த ஞாயிறுக்கிழமையன்று மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. -73

## இராசி பலன்

30-12-1992

(தமிழுக்கு மார்கழி 15)

புதன்கிழமை

ஷஷ்டி பி. ப. 3-59 வரை பூரட்டாதி பி. இ. 4-20 வரை இராகுகாலம் பகல் 12 29 முதல் 1-59 வரை சுபநேரம் மாலை 4-59 முதல் 6-29 வரை உதயத்தின் முன் திருவெம்பாவைப் பூஜாரம்பம் விநாயக ஷஷ்டி விரதம்.

மேடம்; மறைமுக எதிர்ப்பு அவசரபுத்தி. உடன் பிறந்தார் தொல்லை.

இடபம்: முயற்சி பலிதம், தொழில் லாபம், சுபகாரிய நிகழ்வு.

மிதுனம்: சுமுகமான வெற்றி, ஜனவசியம், வாக்கு வன்மை.

கடகம்: தேக பாதிப்பு, கணவனது துன்பம், பண நெருக்கடி.

சிங்கம்: குழப்பநிலை, குடும்ப விவகாரம், தொழில் கஸ்டம்.

கன்னி: உயர்ந்த அந்தஸ்து சுபநிகழ்வு, புத்திசாதுரியம்.

துலாம்: உடல் வருத்தம், முயற்சி வெற்றி, செல்வந்தர் நட்பு.

விருச்சிகம்: அன்னியர் துன்பம், வீண்பிரமை, காரிய தடை.

தனுசு: தொழில் வெறுப்பு, மறைமுகமான செலவுகள், மனச்சுமை.

மகரம், அறச்செயல்கள், பரபரப்பு, புதிய ஒப்பந்தம்.

கும்பம். பணியாள் ஒத்துழைப்பு, தொழில் சிறப்பு, இனசன மதிப்பு.

மீனம்: தொழில் சிறப்பு, காரியசித்தி, சன்மானம்.

— ஜோதிடர்

## ம. எண்ணெ லீற். 40 ரூபா

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் பொதுமக்களின் பாவனைக்கென ஒரு லீற்றர் ரூபா நாற்பது வீதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. (163)

## ரமணமகரிஷி ஜயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 114வது ஜயந்தி தினம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் உடுவில் கிழக்கு-கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் நடைபெறும்.

ஸ்ரீரமண பகவான் அருளிய நான் யார்? ஆத்ம சத்துவ மெஞ்ஞான விளக்கங்களின் விரிவுரைகள் தத்துவ ஞான நூலாசிரியர் திரு. த. சதாசிவதாசன் வழங்குவார். ஜயந்தி பூஜைகளும் ஆராதனைகளும் இடம்பெறும்.

## இன்று

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் 'ஒளி விழா' நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்விற்கு யாழ் ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் [பிரதம]விருந்தினராக கலந்து கொள்வார். பயிலுனர்களினதும் கிளைப் பிரிவுகளினதும் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் இடம்பெறும். -158

0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்விக் கோட்ட கொத்தணி, பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று 30ம் திகதி புதன்கிழமை மு. ப 9-30 மணிக்கு யாழ். வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் சீருடை, இலவசப்புத்தகம் விநியோகிப்பது பற்றித் தெரிவிக்கவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது சமூகம் தரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

0 0

(யாழ்ப்பாணம்)

பளை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று 30ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பளை உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலைய ஸ்ரீஞான வைரவர் ஆலய திருவெம்பாவை உற்சவம் இன்று காலை ஆரம்பமாகி தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் நடைபெறும். தினமும் அதிகாலை விசேட பூஜை அபிஷேகங்கள் பஜனை ஆகிய இடம்பெறும். -எஸ்

0 0

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை காலை சகல சைவ ஆலயங்களிலும் திருவெம்பாவை ஆரம்பமாகின்றது. ஜனவரி மாதம் எட்டாம் திகதி காலை ஆருத்ரா தரிசனத்துடன் திருவெம்பாவை நோன்பு முடிவடையும்.

(உடுவில்)

0 0

நில அளவை உதவியாளர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றது. -109

(நெல்லியடி)

0 0

மந்திகை அரசினர் வைத்தியசாலை கூட்டுறவு நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 30ம் திகதி காலை நடைபெறவுள்ளது. -160

## முத்திரை வந்தன

(யாழ்ப்பாணம்)

குமண அப்பலில் முத்திரைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. இவை குடாநாட்டின் சகல தபால் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இதனால் யாழ். நகரில் நிலவி வந்த முத்திரைத்தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (159

## உணவுப்பொருள் விநியோகம்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்கு அரிசி, சீனி ஆகிய பொருட்களை வழங்கி வருகிறது.

1992 ஜூன், ஜூலை மாதங்களுக்கான மதிய உணவு முத்திரைக்கே இப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (61)

## அகதி முகாம்களில் ப. நோ. கூ. ச. கிளை

(வேலணை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து கினாலி, நாவற்குழி, அரியாலை போன்ற இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் வசதிகருதி புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஊர்காவற்றுறை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமும் இணைந்து மேற்படி முகாம்களில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிளைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. (75)

## கஜமுகாசூரன் போர்

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் சாந்தயர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவிலில் இவ்வாண்டு முதன் முதலாக "கஜமுகாசூரன்" போர் நடைபெறவுள்ளது.

இன்று 30ஆம் திகதி புதன்கிழமை காலையில் திருவெம்பாவை விழாவும் பிற்பகல் விநாயகர் சஷ்டி விழாவும் 'கஜமுகாசூரன்' போரும்நடைபெறவுள்ளன. (139)

0 0

புலோலி(

பருத்தித்துறை பன்னைக் கட்டை பிள்ளையார் கோவில் கயமுகாசூரன்உற்சவம் இன்று 30ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (61)

கிரிக்கெட்

## நியூஸிலாந்து வெற்றி

(வெலிங்டன்)

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி ஒதுக்கப்பட்ட 42ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 136ஓட்டங்களைப்பெற்றது.

நியூஸிலாந்து அணி 37-4 ஓவரில் 138 ஓட்டங்களைப் பெற்றது. 3 ஒரு நாள் போட்டித்தொடரில் இரு நாடுகளும் தலா ஒரு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. (சி)

## நெற்செய்கைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

முல்லை, மணலாறு மாவட்டத்தில் வறிய விவசாயிகள் சுயமாக உற்பத்தி முயற்சியில் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு நெற்செய்கைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

இப்பகுதிகளில் இருந்து 100 வறிய விவசாயிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டு ஒரு ஏக்கர் வீதம் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு தேவையான விதை நெல், உரம், கிருமிநாசினி, களைநாசினி ஆகிய உள்ளீடுகளைகடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

# அகதி முகாமில் தொழுநோய் ஆய்வு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தொழுநோய் ஆய்வுகளை மேற்கொள்ள சுகாதாரப் பகுதியினர் திட்டமிட்டுள்ளனர்.

சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய அகதிமுகாமில் 12ம் திகதியன்றும், வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அம்மன்கோவிலடி அகதிமுகாமில் 13ம் திகதியன்றும், கூளாவடி அமிகு. பாடசாலை அகதிமுகாமில் 18ம் திகதியன்றும், மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதான அகதி முகாமில் 25ம் திகதியன்றும் தொழுநோய் சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. -72

## மின் உபகரணம் அன்பளிப்பு

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் புனர்வாழ்வுப் பிரிவிற்கென சில மின் உபகரணங்களை ஊற்று நிறுவனத்தைச் சேர்ந்த திரு. எஸ். விக்னேஸ்வரன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## நத்தார் உலா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அந்திரான் கிராம வாலிபர்களுடன் ஊர்காவற்றுறை வாலிபர்கள் தொடர்ந்து நடாத்தும் நத்தார் சுற்றுலா கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் இவ்வருட இறுதிவரை இவ்வுலா நடைபெறும்.

## லண்டன் பயணமானார்

(பண்டத்தரிப்பு)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் க. ஜெயரத்தினம் லண்டனிலுள்ள கட்டார்ஸ் பீல்ட் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் பெற்று அங்கு பயணமானார்.

இவர் ஆறு மாதகால மேற்படிப்பை அங்கு பெறுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது (72)

## நேர்முகப் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியல் எதிர்வரும் 1993-ம் ஆண்டு பயிற்சி நெறிகளுக்கு அனுமதிகோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இவ்வாரம் தொடக்கம் நடைபெற்று வருகின்றது கடந்த ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை பெருந்தொகையானவர்கள் இப் பயிற்சி நெறிகளுக்கு அனுமதிகோரி விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. -72

## பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

வட அல்வை நக்கீரன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கி. சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. -160

## விளையாட்டுப்போட்டி

(நெல்லியடி)

அல்வாய் மெதடிஸ்த திருச்சபை ஆதரவில் அண்மையில் யாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. -160

வல்லையில்

## கருவேலம் விதைகள்

(நெல்லியடி)

வடமராட்சியில் கோட்ட கிராமிய உற்பத்திக்குழுமூலம் வல்லை வெளியில் கருவேலம் விதைகள் கடந்த வாரம் விதைக்கப்பட்டன. (160)

## உப அஞ்சல் அதிபர்களின் கஷ்டங்கள்

(தாளையடி)

உபஅஞ்சல் அதிபர்களுக்கு ஒய்வூதியம் வழங்குதல் சனிக்கிழமை வேலைநாட்டடி வாழ்க்கைச் செலவுப்படி வழங்குதல் இடம்பெயர்ந்த உபஅஞ்சல் அதிபர்களின் பிரச்னைகள் பற்றி அகில இலங்கை தமிழ் பேசும் உபதபாலதிபர்கள் தொழிற்சங்கத்தின் யாழ். கிளையினர் தாய்ச்சங்கப் பொருளாளர் திரு. கோ. அ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் வடபகுதி பிரதி அஞ்சல் மாஅதிபரைச் சந்தித்து தங்கள் கஷ்டங்கள், குறைகளை எடுத்துக் கூறினர். -163

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன்
அமரர் வைத்திய கலாநிதி J. P. C. பிலிப்ஸ்

### ஞாபகார்த்த சபை நடாத்தும் கிறிஸ்மஸ் உதைபந்தாட்ட விழா

இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி
விளையாட்டு மைதானம்.

இன்று 30-12-1992 புதன்கிழமை பி.ப. 3-00 மணி

1. பாடும்மீன் வி. க, எதிர் சென். நீக்கிலஸ் வி-க
2. சென். அன்ரனிஸ் வி. க, எதிர் சென். மேரிஸ் வி. க.

உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் ரூபா 5/-

விளம்பர உபயம்:

D. சேனாதிராசா

(பல் கட்டுபவர், கண்பரிசோதகர்)

4, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(தாதிகள் பயிற்சி நிலையம் முன்பாக.)

(ஏ 2731)

# புலிகள் விவகாரத்தில் இந்திய, இலங்கை அரசுகள் தவறுகக் கணித்து ஏமாற்றம் அடைந்துள்ளன

## — தமிழக சஞ்சிகை விமர்சனம் —

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு தடைவிதிக்கப் பட்டபின்பு இலங்கையில் நடக்கும் விவகாரங்கள் எதுவுமே இந்தியாவுக்கு எட்டுவதில்லை. இப்போது சிங்களப் படைகள் தொய்வடைந்த நிலையிலுள்ளன. புலிகளுக்கு எதிரான செய்திகளையே மீண்டும் தமிழக பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'சத்திரியன்' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது. அச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்

தமிழகத்திலிருந்து உதவிகள் எதுவும் கிடைக்காத பட்சத்தில் விடுதலைப்புலிகள் போரில் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்வாங்கும் சாத்தியங்கள் ஏற்படுமென நினைத்தவர்களுக்கு தற்போது ஈழத்தில் நடப்பவை பெரும் ஆச்சரியத்தையே தரும்.

தமிழகத்தில் வெளிவரும் புலிகளுக்கு எதிரான செய்திகள் முழுவதும் இலங்கை அரசால் வழங்கப்படும் பொய்ச் செய்திகளே. உலகத் தமிழரிடையே குழப்பத்தை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கில் பரப்பப்படும் பொய்ச் செய்திகளே அவை.

தற்போது கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் ராணுவத் தீர்வு மேற்கொள்ளக் கூடாதென கண்டித்து வருவதுடன் பொருளாதார உதவிகளை நிறுத்தவும் திட்டமிட்டு வருகின்றனவாம்.

சிங்களவர் மத்தியில் பிரேமதாசாவின் செல்வாக்கு நாளுக்குநாள் தேய்ந்து கொண்டே வருகிறது. அதைச் சரிக்கட்டவே புலிகள்மீது போர் தொடுத்திருக்கும் பிரேமதாசா, தொடர்ந்து போரில் வெற்றிபெற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்து இழந்து கொண்டிருக்கும் செல்வாக்கை நிலைநிறுத்தப் பார்க்கிறார்.

அத்துடன் சீன, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு சலுகை விலையில் ஆயுதங்களை விநியோகித்து வருகின்றன. இன்னமும் போரில் தோற்றுக் கொண்டிருப்பதை காட்டினால் ஆயுத உதவியை தொடர்ந்தும் பெற இயலாது

எனவே இந்நாடுகளிடமிருந்து நிலை பெயர்வாகவேண்டும் என்பதால் போரில் தொடர்ந்தும் வெற்றி பெற்றுக்கொண்டிருப்பதாக பறைசாற்றிக்கொண்டு உலகெங்கும் சிங்கள அரசு செய்தி அனுப்புகிறது.

ஆனால், உண்மையில் தமிழர் வாழும் பகுதியில் நடந்து கொண்டிருப்பது என்ன? புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எந்தப் பகுதியிலும் இராணுவ நடமாட்டமோ, பொலிஸ் நடமாட்டமோ இல்லை. பல முகாம்கள் அழிக்கப்பட்டு விட்டன. சிங்களச் சட்டம் எதுவுமே தமிழர்கள் பகுதியில் கிடையாது.

சிங்கள இராணுவத்தினர் முன்னைவிட போரில் தீவிரமாக இறங்கவேண்டிய நிலை. அப்படியிருந்தும் புலிகளின் தாக்குதல்களிலும் அவர்களின் கண்ணிவெடித் தாக்குதல்களிலும் சிக்கி ஆயிரக்கணக்கான படையினர் உயிரிழந்துவிட்டனர் இத்தாக்குதல்களுக்கு பயந்து 7000 இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் இராணுவத்திலிருந்தே ஓடிவிட்டார்கள்.

சீனஅரசு இலங்கைக்கு வழங்கிய 'ரி-7', 'ரி-5' டாங்கிகளை புலிகள் தாங்களாகவே தயாரித்திருக்கும் 'குமரப்பா 5000' என்ற மோட்டார் குண்டு மூலம் தகர்க்கிறார்கள். இப்படி பல டாங்கிகளை செயலிழக்கச் செய்திருக்கிறார்கள்.

புலிகள் நேரடியாக கண்ணிவெடி, மிதிவெடி, பசிலன், குமரப்பா பீரங்கிகள் வெடிமருந்துகளை உற்பத்தி செய்வதாலும் சிங்கள சிப்பாய்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றியுள்ளதாலும் ஆயுதங்களுக்காக வெளிநாட்டினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமை முற்றிலுமாக மாறி முழு அளவு போருக்கு எப்போதுமே தயார் நிலையில் புலிகள் இருக்கிறார்கள்

இப்படி இராணுவ நடவடிக்கை பயனளிக்காமல் போய் விட்டதால் பிரேமதாசா இன்னமும் மறைமுகமாக புலிகளுக்கு பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விட்டுக்கொண்டே இருக்கிறார். ஒருபுறம் இப்படி இருக்கும் பிரேமதாசாதான் மறுபுறம் உலகை ஏமாற்ற பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க இலங்கை சகல உதவிகளையும் வழங்குமெனவும் கூறியுள்ளார்.

ஆனால் சிங்கள அரசால் பிரபாகரனின் நிழலைக்கூட நெருங்க முடியாது. இந்த இலட்சணத்தில் இந்திய அரசுக்கு உதவ தயாராயிருப்பதாக கூறுவது கேலிக்குரிய விடயமே. இந்திய அரசு ராஜீவ் கொலையில் அவசர அவசரமாக பிரபாகரனை சம்பந்தப்படுத்தி புலிகளை தடை செய்தும், இன்னமும் இது மக்களைப் பொறுத்தவரையில் ஒரு முற்றுப்பெறாத நாடகமாகவே தெரிகிறது.

ஆரம்பத்தில் இந்திய அரசு கூட பிரபாகரனை பிடித்து வந்து குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டனை கொடுப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான விஷயம் இல்லை என்றே தப்புக்கணக்கு போட்டது ஆனால் இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் பேசிய பின்பு இது எளிதான விடயமல்ல எனத்தெளிவாக புரிந்தாலும் 'கமாண்டோ' படைகளை அனுப்பி பிரபாகரனை இந்தியா கொண்டு வந்து விடலாம் என்று திட்டம் தீட்டியது

இதற்கான தகவல் சேகரிப்பதற்காக கொழும்பு சென்ற 'சி.பி.சி.ஐ.டி' பிரிவினர் கூட மிகப் பெரிய தோல்வியுடனே திரும்பி வரவேண்டியிருந்தது. இந்தியாவின் தொடர்பை முற்றாக விட்டு விட்டால் புலிகள் செயலிழந்து போவார்கள் என்று இந்திய அரசு எதிர்பார்த்தும் அவர்களுக்கு ஏமாற்றத்தையே அளித்திருக்கிறது.

இந்தியா அரசின் ஆதரவு இல்லாத நிலையிலும் புலிகளின் தீவிர போராட்டம் இந்திய அரசுக்கு அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது.

கமாண்டோ படையினர் மூலம் தாக்குதல் தொடுத்து புலிகள் தலைவரை பிடித்து விடலாமென நினைத்தது முடியாது என்பதை புரிந்து கொண்டார்கள். இந்த நேரத்தில் பிரபாகரன் இன்னமும்குற்றவாளி என்று கோர்ட் மூலம் உறுதி செய்யப்படவோ, தீர்ப்பளிக்கப்படவோ இல்லை. எனவே இலங்கை பிரஜையை சந்தேகத்தின் பேரில் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்திய அரசும் கேட்க முடியாது.

புலிகள் விடயத்தில் சிங்கள அரசும் இந்திய அரசும்தவறாக கணித்து ஏமாந்துவிட்டன. பிரபாகரனை பிடிக்கவோ, அவரை சரணடையச் செய்யவோ இரண்டு அரசுகளாலும் முடியாது ஏனெனில்புலிகளின் யுத்தம் அவர்களது சொந்த மண்ணிற்காக கொடுக்கப் படாத உரிமைகளை மீட்பதற்காக நடத்தப்படும் உயிர் யுத்தம். அந்த யுத்தவீரர்களை, சம்பளம்வாங்கும் படைகளால் என்றென்றும் முறியடிக்க முடியவே முடியாது.

நியாயத்திற்காக நடாத்தப் படும் போராட்டங்கள் தோற்றதாக சரித்திரம் கிடையாது என்பதைத்தான் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வரும் தகவல்கள் வலியுறுத்துகின்றன. (சி)

---

# 2 கோடி பேர் பங்குபற்றும்

## 10. கி. மீ. நீள மனித சங்கிலிப் பேரணி

(கல்கத்தா)

இந்தியாவில் ஒருமைப்பாட்டையும், அமைதியையும் வலியுறுத்தி 2 கோடி மக்கள் பங்குபற்றும் மனிதச்சங்கிலி போராட்டம் நடாத்தமேற்கு வங்க அரசு முடிவு செய்துள்ளது.

சுமார் பத்து கிலோமீற்றர் நீளமான இந்த மனிதச்சங்கிலி போராட்டத்தில் இரண்டு கோடி மக்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இன, மதக்கலவரங்களால் பெருமக்கள் உயிரிழந்ததுடன், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இவற்றை கண்டித்தும் அனைவரும் இன,மத வேறுபாடின்றி இந்தியாவின் ஒற்றுமைக்கு உழைக்கவேண்டுமெனக் கோரியும் இந்த மனித சங்கிலி போராட்டத்தை மேற்குவங்க முதல்வர் திரு. ஜோதிபாசு ஏற்பாடு செய்துள்ளார் (ஜ)

---

## பன்றிகள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதி வயல்களில் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் இரவு பகலாக வயல்களில் காவல் புரிந்து வருகின்றனர்.

இவர்கள் நள்ளிரவு வேளைகளிலும் கொட்டும் பனிக்குள் ஒலிகளை எழுப்பியும் தகரங்கள் போன்றவற்றில் தட்டியும் பன்றிகளை துரத்தி வருகின்றனர். (159)

---

## கௌரவிப்பு வைபவம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் புனித பொஸ்கோ வித்தியாலய அதிபர், ஆசிரியர்களை கௌரவிக்கும் வைபவம் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. - 15

---

## புனரமைப்பு கூட்டம்

(வேலணை)

மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக்கூட்டம் அண்மையில் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. சு. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. - 75

---

## முகாம்கள் திருத்தம்

(தாளையடி)

இராணுவ நடவடிக்கை காரணமாக மாதகல், இளவாலைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருந்த குடும்பங்கள் தாளையடியில் அமைந்திருந்த முகாம்களில் தங்கியிருந்தனர். மழைக்கு முகாம் ஒழுகுவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து முகாம்களை திருத்தி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளனர். (163)

---

# இந்திய அரசு மீது இந்துப்பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அயோத்தியில் பாபர்மசூதி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிலும் இலங்கை தவிர்ந்த ஏனைய அயல்நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் இந்துக்களுக்கும் இந்துக் கோவில்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்செயல்கள் குறித்து யாழ். இந்துப் பேரவை கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

பாபர்மசூதி தகர்க்கப்பட்டமை ஒரு துர்அதிர்ஷ்டவசமான நிகழ்வாகும் இந்நிகழ்வைச் சாட்டாக வைத்து இந்திய அரசாங்கம் இந்துக்களுக்கும் இந்துசமய அமைப்புகளுக்கும் தலைவர்களுக்கும் எதிராக வஞ்சம் தீர்க்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கைது செய்யப்பட்ட இந்து சமயத் தலைவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் இந்து மக்களுக்கும் அமைப்புகளுக்கும் எதிரான நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடுமாறும் இந்திய மக்கள் தொகையின் 85 வீதமான இந்துக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நாட்டில் சகச நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நடைபெற்ற வன்செயல்களில் உயிர் இழந்த அப்பாவி மக்களுக்கு தமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

---

உதைபந்தாட்ட

# போட்டி ஆட்டங்கள் நடத்த அனுமதி தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையின் அனுமதியின்றிப் போட்டி ஆட்டங்கள் நடாத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது. 1-1-93ல் முதல் புதிய விதிமுறைகளுக்கு அமைவாகவே போட்டி ஆட்டங்கள் நடாத்தப்படமுடியுமெனவும் இச்சபை அறிவித்துள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதைபந்தாட்டக்கழகங்களையும் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது. பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 10-01-1993 ஆகும்.

கழகங்கள் விண்ணப்பப் படிவங்களை செயலாளர் உதைபந்தாட்ட லீக் யாழ்ப்பாணம், செயலாளர் உதைபந்தாட்ட லீக் பருத்தித்துறை யாழ். மாவட்டச்செயலகம் கோண்டாவில், யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (வி)

---

# தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு இடங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறையினர் ஜனவரி மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீழ்க்காணும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீட்புநிதி சேகரிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை, நல்லூர், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்தவர்களிடம் கோப்பாய்ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக உள்ள கோப்பாய் மகாவித்தியாலயத்தில் காலை 8-30 மணி தொடக்கம் 10 மணிவரைக்கும்-

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, காரைநகர் ஆகிய உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் 10-30 மணி தொடக்கம் 12 வரைக்கும்-

சாவகச்சேரி, பச்சிலைப் பள்ளி ஆகிய உதவிஅரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணிவரைக்கும்-

கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவிஅரசஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் 4 மணி தொடக்கம் 5 மணி வரை மீட்புநிதி சேகரிக்கப் படும். -வி

---

## திரிபோஷா இல்லை

(புலோலி)

தாய்சேய் ஊட்டச்சத்துக்கு உணவாக வழங்கப்பட்டுவரும் திரிபோஷா கடந்த இரு மாதங்களாக வடமராட்சிப் பகுதியில் வழங்கப்படவில்லை, (61)

## மட்டக்களப்புப் பகுதியில்
# கிராமம் கிராமமாக தமிழர் படையினரால் விரட்டியடிப்பு
## அகதிகள் தொகை தினமும் அதிகரிப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பிலுள்ள தமிழர்கள் கிராமம் கிராமமாகப் படையினரால் விரட்டியடிக்கப்பட்டு வருவதுடன் அங்கு சிங்களவர் முஸ்லிம் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

தமிழர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் மட்டக்களப்பு மேற்கு மண்டூரிலுள்ள முதலைக்கண்ணிமேடு கிராமத்திலுள்ள தமிழ் மக்களை உடனடியாக வெளியேறுமாறு படையினர் அறிவித்துள்ளனர்.

படையினரின் அறிவிப்பைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மண்டூருக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் மண்டூர் சுற்றி வளைக்கப்பட்டு 20க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்புகளும், தேடுதல் வேட்டைகளும் இக்கிராமங்களில் அடிக்கடி நடத்தப்படுவதுடன் தமிழர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகள் தொகை தினமும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சம்பளம் இன்று வழங்கப்படும்

(திருநெல்வேலி)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான சம்பளம் இன்று முதல் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான இரண்டு மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை. இவர்கள் கடமையாற்றத் தொடங்கியது முதல் வழங்கப்படாத சம்பளம் இன்று காசோலையாக வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகள் நேற்று பூர்த்தியடைந்துள்ளன. கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஊடாக இவர்களுக்கான சம்பளம் வழங்கப்படும்.

இந்த ஆசிரியர்கள் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் சென்று காசோலைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157)

---

வண்ணை - சாந்தையர் மடம்

## ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
# விநாயக சஷ்டி உற்சவமும் கஜமுகசூர சங்காரமும்

அடியார்களே:

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால், நிகழும் ஆங்கீரச வருடம் மார்கழி 8ம் திகதி (30-12-1992 புதன்கிழமை காலை 8-00 மணி முதல் விநாயக சஷ்டி உற்சவமும் - கஜமுகசூர சங்காரமும் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் இக்காலங்களில் விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வார்களாக.

★ நிகழ்ச்சி நிரல் ★

காலை 8-00 மணி: காலைப் பூஜை.
10-00 மணி: சங்காபிஷேகம்.
12-00 மணி: நண்பகல் பூஜை.
12-15 மணி: பஞ்சமுகார்ச்சனை.
1-00 மணி: விநாயக புராண படனம்.
பிற்பகல் 3-00 மணி: மாலைப் பூஜை.
3-30 மணி: பிள்ளையார் கதைப் படிப்பு.
4-00 மணி: விநாயக சஷ்டி உற்சவமும், கஜமுகசூர சங்காரமும்.
6-00 மணி: பிராயச்சித்த அபிஷேகம், விசேட பூஜை. பிள்ளையார் கதைப் படிப்பு.

★ மங்கள இசை ★

திரு. க. குமாரதாஸ் - க. ஜெகன் சகோதரர்கள்.

★ விசேட மேளக் கச்சேரி ★

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| நாதஸ்வர மேதைகள் | தவில் மேதைகள் |
| N. K. பஞ்சாபிகேசன் | T. உதயசங்கர் |
| P. நாகேந்திரம் | K. நித்தியானந்தம் |
| V. K. கானமூர்த்தி | K. கணேசன் |
| V. K. பஞ்சமூர்த்தி | E. வாசுதேவன் |
| N. K. கணேசன் | N. K. வீராச்சாமி |

உபயகாரர்.

தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை. (எ 2733)

---

### படைகளுக்கு
(1-ம் பக்க தொடர்ச்சி)

படையினரின் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதிகளில் முன்னுரிமை மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கப்போவதாகவும் இப்பிரசாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வரும் புதிய ஆண்டில் படையினரை ஊக்குவிக்கும் பல புதிய திட்டங்களையும் அரசு செயற்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

### பல்கலைக்கழக ஊழியர்க்கும்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

விகாரர நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்ந்து வழங்குவதற்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தங்களின் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வலாம். பல்கலைக் கழக ஊழியர்களுக்கு 25 வீத விசேட கொடுப்பனவையும் வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இச்சலுகைகளை மூவாயிரம் போதனாசிரியர்களும், 7 ஆயிரம் பல்கலைக் கழக ஊழியர்களும் பெறுவார்கள். (வி)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## விவசாய பீடம்

விவசாய பீடத்தின் 1991/92ம் கல்வியாண்டு 1993 - 01 - 04 அன்று ஆரம்பமாகும். புதிய மாணவர்களும் அன்று சமூகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். விடுதி வசதிகள் விவசாயபீடம், கிளிநொச்சியில் வழங்கப்படும்.

குறிப்பு:- விவசாயபீட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு செல்வதற்கு பயண ஒழுங்குகளில் இடையூறுகள் இருப்பின் பல்கலைக்கழக பதிவாளருடன் 31-12-1992 ற்கு முதல் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

(ஏ-2732)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8

## இ. காங்கிரஸுடனான உறவு பற்றி
# ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்

(சென்னை)

இந்திரா காங்கிரசுடனான அ. தி. மு. க. உறவு பற்றி இக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளரிடம் பேசிய அவர் ஒருதலைப்பட்சமாக தமது கட்சி அ. தி. மு. க. உடனான உறவை முறித்துக் கொள்ளாது என்றும் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற அ. தி. மு. க. பொதுச்சபைக் கூட்டத்தில் மறைந்த பிரதமர் ராஜீவ் காந்திக்கு இரங்கல் தெரிவிக்காததையும், தமிழக தேர்தல் வெற்றியில் காங்கிரசின் பங்கு பற்றித் தீர்மானத்தில் குறிப்பிடாததையும் அவர் சுட்டிக்காட்டினார். (ரி)

### பல்கலைக்கழகங்கள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத துரதிர்ஷ்டவசமான நிலைக்குள்ளாகியுள்ளார்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பேராசிரியர் அர்ச்சுண அலுவிகார தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஊழியர்கள் மீண்டும் இவ்விதம் நடந்துகொண்டால் வருங்காலத்தில் இந்த நாட்டில் பல்கலைக்கழக கல்வி சீர்குலைவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று பேராசிரியர் அலுவிகார மேலும் கூறியுள்ளார். (வி)

### இலங்கை திரும்பியுள்ள
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியமர்த்த முடியாதுள்ளதாக இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகதி முகாம்களில் அடிப்படை வசதியின்றி ஆயிரக்கணக்கான அகதிகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவது குறித்து ஏற்கனவே பல மகஜர்கள் ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் தெரிந்ததே. (கி-வி)

### கைப்பற்றப்பட்ட
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ அதற்குரிய ரவைக்கூடுகள் - 7
★ ரி 81 ரக துப்பாக்கிகள் - 2
★ அதற்குரிய ரவைக்கூடுகள் - 8
★ நடுத்தர ரவைகள் - 1045
★ ஜே. ஆர். கைக்குண்டுகள் - 1
★ ஏ. கே. ரவைக்கூட்டு தாங்கிகள் - 4
★ கிட்பாய்க் - 5
★ இராணுவ தொப்பிகள் - 2
★ ராணுவ பட்டிகள் - 2
★ மழைக்கவசம் - 3
★ ரி 81 ரக துப்பாக்கிக்குரிய கிரனேட் - 2 (ரி)

### ஜனாதிபதி தேர்தல்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிகள் கருத்து தெரிவித்ததினாலேயே, திடீர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாமென பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

எதிர்க்கட்சிகளிடையே தற்போது பெரும் பிளவுகள் ஏற்பட்டு வருகிறது. இதை நான் பயன்படுத்தித் தேர்தலை நடாத்தமாட்டேன். எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்வரும் இரண்டு வருடகாலத்துக்குள் சுகதேகியாக வந்ததும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதையும் காண நான் விரும்புகிறேன்.

50 சதவீத வாக்குகளைப் பெற்று நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன். தற்போது திடீர் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் 72 சதவீத வாக்குகளைப் பெறுவேன். ஆனால் நான் அதை விரும்பவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாசா மேலும் தெரிவித்தார். (வி)

## தென்னாபிரிக்கா வெற்றி

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (வி)

## நத்தார் விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் இன்று நத்தார் விழாவும், புதுவருடவிழாவும் பி. ப 2 மணி தொடக்கம் நடைபெற உள்ளது.

யாழ். ஆண்டகை அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்திரநாயகம் இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

## பென்ஹர் வீடியோ திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் பென்ஹர் (BEN - HUR) எனும் ஆங்கில திரைப்படம் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் பி.ப.3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களும், பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் இப்படக்காட்சியை கண்டுகளிக்கலாம்.

### ராணுவ ரோந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினர் ஆயுதங்களையும் போட்டுவிட்டு ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### குமணவில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளை யாழ். தபாலக அதிகாரிகள் மேற்கொண்டுள்ளார்கள். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தபால்களை அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. (158)

### கொழும்பு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருபவர்களின் விபரங்களைப் பொலிஸாருக்குத் தெரிவிக்காது உதாசீனமாக இருப்பவர்கள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்படுவார்கள் எனப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (வ)

### வெளிவாரி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தில் 1990/91ம் ஆண்டிற்கான வெளிவாரி பரீட்சைகள் முதல்தடவையாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன. இப்பரீட்சையின் முடிவுகளே ஜனவரி மாத நடுப்பகுதியில் வெளியாகவுள்ளன.

எரிபொருள் பிரச்னையால் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகளில் ஏற்பட்ட தாமதமே பரீட்சை முடிவுகள் வெளியாவதற்கு காலம் பிந்தியதாக தெரிவித்தார். (159)